( சுருக்கம் )

படிகள் - அகவிலைப்படி - 1-7-2010 முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் - ஆணை — வெளியிடப்படுகிறது.

---

( செயலகக் கிளை )

(நிலையான) வாரியச் செயல்முறை ஆணை (முழுவாரியம்) எண். 34 நாள் 4-10-2010.

புரட்டாசி மாதம் - 18ம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2041.

படிக்கப்பட்டது:

1) தமிழ்நாடு மின்வாரிய ஆணை (நிலை) எண்:223 (தலைவர்) செயலகக் கிளை நாள் 21-11-2009.
2) தமிழ்நாடு மின்வாரிய ஆணை (நிலை) எண்:224 (தலைவர்) செயலகக் கிளை நாள் 21-11-2009.
3) (நிலையான) வாரியச் செயல்முறை ஆணை (முழுவாரியம் ) எண்.9 ( செயலகக் கிளை ) நாள் 9-04-2010.
4) அரசு ஆணை எண்: 371 நிதி (படிகள்) த் துறை. நாள் 24-9-2010.

www.tnebes.org

******

செயல்முறைகள்:-

பார்வை 3-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்வாரிய ஆணையில், வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 01-01-2010 முதற்கொண்டு அகவிலைப்படியினை 27 சதவீதத்திலிருந்து 35 சதவீதமாக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டது.

2. பார்வை 4-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு ஆணையில், 01-07-2010 முதற்கொண்டு மாநில அரசுப் பணியாளர்களுக்கு கீழ்கண்ட திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி வழங்க ஆணையிட்டுள்ளது:-

| எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| 01-07-2010 முதல் | அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 45 சதவீதம் |

3. தமிழ் நாடு அரசின் இந்த ஆணையைப் பின்பற்றி, தமிழ்நாடு மின்சார வாரியம், அதன் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அகவிலைப்படியைக் கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கிட ஆணையிடுகிறது:-

| எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| 01-07-2010 முதல் | அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 45 சதவீதம் |

4. மேற்கண்ட உயர்த்தப்பட்ட வீதத்திலான அகவிலைப்படியானது, 1–7–2010 முதல் கணக்கிடப்பட்டு, மூன்று மாதத்திற்கான நிலுவைத் தொகை 11–10–2010 அன்று ரொக்கமாக வழங்கப்படும்.

5. அனுமதிக்கத்தக்க உயர்த்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிட அடிப்படை ஊதியத்துடன் தர ஊதியத்தையும், (Grade Pay) தனிப்பட்ட ஊதியத்தையும் (Personal Pay) சேர்த்துக்கொள்ள வேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில், ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின், அதனை அடுத்த ஒரு ரூபாயாகக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அதனை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

6. மேலே அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழுநேர அலுவலர்களுக்கும், மாதாந்திர ஊதியம் பெறும் முழுநேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கதக்கதாகும். இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி பகுதி நேர அலுவலர்களுக்கு அனுமதிக்கதக்கதல்ல.

7. இவ்வாரிய ஆணை பெறப்பட்டமைக்கான ஒப்புகையை உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும்.

www.tnebes.org

(வாரிய ஆணையின்படி)

இரா. மதிவாணன்
செயலாளர்.

பெறுநர்:

அனைத்துத் தலைமைப் பொறியாளர்கள்.
தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் / (பொது) / (வருவாய்).
அனைத்து மேற்பார்வை பொறியாளர்கள்.
அனைத்து துணைச் செயலாளர்கள்/ செயலகக் கிளை.
தலைமை உட்தணிக்கை அலுவலர்.
துணைத் தலைமைப் பொறியாளர்/நிர்வாகக் கிளை.
தன்னகத் தணிக்கை அலுவலர் (மாநில கணக்கு துறைத் தலைவர்).
அனைத்துக் கிளைகள் (தலைமையிடம்).

நகல்:

தலைவரின் பார்வைக்கு.
உறுப்பினர் (பகிர்மானம்).
உறுப்பினர் (உற்பத்தி).
செயலாளர் / தமிழ் நாடு மின்சார வாரியம்.
மேலாண்மை இயக்குநர் / தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்.
கூடுதல்காவல்துறை இயக்குநர் (விழிப்புப்பணி) / தமிழ் நாடு மின்சார வாரியம்.
இயக்குநர் (நிதி) / தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்.
இயக்குநர் (மின் தொடரமைப்புத் திட்டங்கள்) / தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்.
இயக்குநர் (இயக்குதல்) / தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்.
இயக்குநர் (நிதி) / தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் விநியோகக்கழகம்.

இயக்குநர் (உற்பத்தி) / தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் விநியோகக்கழகம்.
இயக்குநர் (திட்டம்) / தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் விநியோகக்கழகம்.
சட்ட ஆலோசகர் / தமிழ் நாடு மின்சார வாரியம்.
மேற்பார்வை பொறியாளர் / தலைவர் அலுவலகம்.
தொழில் உறவு அலுவலர்
இயக்குநர் / தமிழ்நாடு மின்வாரிய பதிப்பகம்.
இயக்குநர் / கணினி மையம்.
தலைமை மருத்துவ அதிகாரி / தலைமையிட மருந்தகம்.
அனைத்து அலுவலர்கள் / பிரிவுகள் / செயலகக் கிளை.
தலைமை மக்கள் தொடர்பு அதிகாரி/தமிழ் நாடு மின்சார வாரியம்/சென்னை-2.
உறைவிட மேலாளர் / தமிழ் நாடு மின்சார வாரியம் / புதுதில்லி.
உதவி பணித் தொகுதி அலுவலர் / தமிழ் வளர்ச்சி / த.நமி.வா. இதழில் பிரசுரிப்பதற்காக.
அ–2, அ–8, அ–9, அ–10, அ–11, அ–12, அ–13, அ–19 மற்றும் அ–32 பிரிவுகள்/
செயலகக் கிளை.
நிர்வாக இயக்குநர் / மின்நிதி முதலீட்டுக் கழகம்,
டிஎன்.எப்.சி – டவர், எண். 490/3-4, அண்ணா சாலை, நந்தனம் சென்னை-35
தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்,
ஈ.வி.கே. சம்பத் மாளிகை, 5வது மாடி, கல்லூரி சாலை, சென்னை–6.
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 19,A, ருக்மணிலட்சுமிபதி சாலை
(மார்சல்ஸ் ரோடு) எழும்பூர், சென்னை-8.
தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம்.
தமிழ்நாடு மின்வாரிய கணக்காயர் மற்றும் களத் தொழிலாளர் சங்கம்.
தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்.
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு.
மின்சாரப் பிரிவு அண்ணா தொழிற் சங்கம்.
தமிழ்நாடு மின் வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்.
தமிழ்நாடு தேசிய மின் தொழிலாளர் சம்மேளனம் (ஐ.என்.டி.யு.சி). (இரண்டு பிரிவுகள்).
தமிழ்நாடு மின் வாரிய பொறியாளர் சங்கம்.
தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ்.
தமிழ்நாடு மின்வாரிய தொழிலாளர் ஐக்கிய சங்கம்.
தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் கழகம்.
தமிழ்நாடு மின்வாரிய நிதி மற்றும் கணக்கு அலுவலர் சங்கம்.
பாரதீய மின் தொழிலாளர் சம்மேளனம்.
தமிழ்நாடு மின் வாரிய அட்டை பட்டியல் பணியாளர் சங்கம்.
தமிழ்நாடு மின் வாரிய டாக்டர் அம்பேத்கார் எம்ப்ளாயீஸ் யூனியன்.

// உண்மை நகல் // உத்தரவின்படி அனுப்பப்படுகிறது //

ரெ. ருக்மணி
04.10.10

பிரிவு அலுவலர்.

www.tneb.org